மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம், ஓட்டப்பிடாரம்.

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII,Cr.P.C)

| | | |
|---|---|---|
| வழக்கு எண். | : | CC 523/22 |
| பெயர் | : | பிரதாபன் (PW 5) |
| த/பெ. க/பெ | : | |
| வயது | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| Calling | : | மருத்துவர் |

(Accused Kumaravel is present. )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 27 th day of January 2025

<u>முதல் விசாரணை</u>

1)நான் தற்போது தூத்துக்குடி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் அவசர பிரிவு மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன்.

2)கடந்த 26.09.2017 அன்று சட்டம் சார்ந்த மருத்துவ பிரிவில் தூத்துக்குடி அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் போதகராக பணியில் இருந்தபோது அன்று பகல் 12.50 மணிக்கு தருவைகுளம் காவல்நிலைய குற்ற எண் 121/2017 வழக்கில் சம்மந்தப்பட்ட பெரியசாமி என்பவருடைய பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதம் கொடுத்தனர்.அதன்படி அதே நாள் 1.05 மணிக்கு பிரேத பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டது.பிரேதமானது மிதமான போஷாக்குடனும் கை, மற்றும் கால், விரல்நகங்கள் ஊதா நிறத்தில் காணப்பட்டது.கீழ்க்கண்ட இறப்பிற்கு முந்தைய காயங்கள் காணப்பட்டன.

3)1) 15X7 செமீ அளவில் சிராய்ப்பு காயம் இடது கை முட்டியில் காணப்பட்டது.2. 3X2 செமீ அளவில் சிராய்ப்பு காயம் இடது பின் பகுதியில் காணப்பட்டது.3.10X7 செமீ அளவில் சிராய்ப்பு காயம் இடது கீழ் நெஞ்சு பகுதியில் காணப்பட்டது.4.04X3 செமீ அளவில் சிராய்ப்பு காயம் வயிற்றின் இடது பக்கவாட்டில் காணப்பட்டது.5.வெவ்வேறு அளவுள்ள பல எண்ணிக்கையிலான பகுதி ஆறிய சிராய்ப்பு காயங்கள் வலது கைமுட்டியின் வெளிப்புறத்தில் காணப்பட்டது.6. வெவ்வேறு அளவுள்ள பல எண்ணிக்கையிலான சிறிய சிராய்ப்பு காயங்கள் இடது நெற்றி பகுதியிலும் உதட்டின் இடது பக்கத்திலும் காணப்பட்டது.7.இடது காலில் இரண்டு எலும்புகளும் உடைந்து

காணப்பட்டன.8.தலை பகுதியில் மூளையின் பின்புறம் பக்கவாட்டு பகுதி மற்றும் சிறு மூளை பகுதி சப்அராக்னாய்டு இரத்த கசிவு காணப்பட்டது.

4)மூளையானது கன்றி காணப்பட்டது.மற்ற உறுப்புகள் சாதாரணமாக காணப்பட்டது.வயிற்றின் உட்பகுதியில் 100 மில்லி அளவுடைய இரத்தம் கலந்த திரவம் எந்தவித வாடையும் இன்றி அதன் உட்பகுதி நீர் சுரந்து காணப்பட்டது.இறந்த நபர் தனக்கு ஏற்பட்ட பலவிதமான காயங்கள் மற்றும் அதன் விளைவுகளினால் பிரேத பரிசோதனைக்கு முன்பாக 18 மணி முதல் 24 மணி நேரத்திற்குள் இறந்திருக்கலாம் என்று பிரேத பரிசோதனை அறிக்கை வழங்கினேன்.**(மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கை அசா ஆவணம் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும்
குற்றவியல் நடுவர்,
ஓட்டப்பிடாரம்.